# கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்

## Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

மாசி மாத இதழ்
NEWS BULLETIN
FEBRUARY 2023
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்


| நாள் | நிகழ்வு |
|---|---|
| | தமிழ்ப் பாடசாலை மற்றும் கலைப் பாடங்கள் நடைபெற்று வருகின்றன. பாடசாலையின் முகவரி: Clifford House, 38-44, Binley Road, Coventry CV3 1JA. |
| 04/03/23 | Griffin College International Examination in Cultural Subjects எமது பாடசாலையில் நடைபெறும். அன்று தமிழ்ப் பாடசாலை நடைபெறாது. |
| 25/03/23 | கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் ஆண்டு விழா |
| 01/04/23 | OFAAL Theory Exam – Coventry |
| 21/05/23 | OFAAL Practical Exam – Coventry |
| 30/04/23 | பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு நாள் |
| May – June 23 | பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் Speaking Test பேச்சுப் பரீட்சை |
| 24/06/23 | பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் எழுத்துப் பரீட்சை |

| SATURDAY | TIME |
|---|---|
| Tamil | 9.50am-12.30pm |
| Vocal | 1pm-4pm |
| Keyboard/Violin | 1pm-4pm |
| Karate | 12.30pm-1.30pm |

| SUNDAY | TIME |
|---|---|
| Bharathanatiyam (Sathya Teacher) | 10am-2pm |
| Bharathanatiyam (Ajantha Teacher) | 1pm-4pm |
| Vocal | 10am-2pm |
| Keyboard | 10am-2pm |
| Violin/ Veena | 10am-2pm |
| Miruthangam | 1pm-4pm |
| Tamil | 10am-12noon |




## **Key Stage வகுப்புகள்**

18/02/2023 அன்று எமது பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டு, சனிக்கிழமைகளில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.





கொவன்றியிலுள்ள ஆங்கிலப் பாடசாலைகளில், எல்லா வகுப்பு மாணவர்களுக்கும் தனது சேவையினை வழங்கும் தகுதியும், அனுபவமும் உள்ள ஆசிரியை **Miss Chloe Evans** அவர்களால் கற்பிக்கப்படுகிறது. எனவே உங்கள் குழந்தைகளையும் இந்த வகுப்புக்களில் இணைத்துப் பயன்பெறுங்கள்.

## உலக தாய்மொழி தினம்
## ஏன் கொண்டாடப்படுகிறது?

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (யுனெஸ்கோ ) பிப்ரவரி 21ம் தேதியை உலக தாய்மொழி தினமாக கடைப் பிடிக்கிறது.




இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிவினையைத் தொடர்ந்து, பாகிஸ்தான், மேற்கு, கிழக்கு என்று இரண்டு பகுதிகளாக இருந்தது. இதில், கிழக்குப் பாகிஸ்தான், தற்போதைய வங்கதேசம். வங்க மொழி பேசும் மக்கள் அதிகளவில் வசிக்கும் கிழக்கு பாகிஸ்தானில், உருது மட்டுமே தேசிய மொழியாக இருந்தது. ஒரே மதத்தினராக இருந்தாலும், மேற்குப் பாகிஸ்தானில் அதிகம் பேசப்படும் உருது மொழியானது, கிழக்குப் பாகிஸ்தானில் திட்டமிட்டுத் திணிக்கப்படுவதை, அந்த மக்கள் ஏற்கவில்லை.

இதையடுத்து கிழக்குப் பாகிஸ்தானில் தேசிய மொழியாக வங்க மொழியே வேண்டும் என்று 1952-ம் ஆண்டு பிப்ரவரி 21ம் தேதி 'வங்க மொழி இயக்கம்' உருவானது. இதையடுத்து வங்க மொழி இயக்கத்தைச் சார்ந்த மாணவர்கள், அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். காவல்த் துறையின் நடவடிக்கையால், மாணவர்கள் 4 பேர் உயிரிழந்தனர். போராட்டம் தீவிரமாகப் பரவியது. கடந்த 1956ம் ஆண்டு, கிழக்குப் பாகிஸ்தானின் தாய் மொழியாக வங்க மொழி அறிவிக்கப்பட்டது.


இதையடுத்து, டாக்காவில் நடைபெற்ற போராட்டத்தில், உயிரிழந்தவர்களின் நினைவாக ஆண்டுதோறும், பிப்ரவரி 21ம் திகதியை உலகத் தாய்மொழிகள் தினமாகக் கடைபிடிக்க வேண்டும் என்கிற தீர்மானத்தை வங்கதேச அறிஞர் ரபீக்குல் இஸ்லாம் 1998ம் ஆண்டு யுனெஸ்கோவில் முன்மொழிந்தார். தாய் மொழிக்காகப் போராடி உயிரிழந்தவர்கள், அதற்கான இயக்கத்தை நினைவுகூறி, அனைத்து மக்களின் தாய் மொழி உரிமையைப் பாதுகாக்கும் வகையில், பிப்ரவரி 21ம் திகதியை சர்வதேச தாய்மொழி தினமாக யுனெஸ்கோ 1999ம் ஆண்டு அறிவித்தது.

இதையடுத்து 2000ம் ஆண்டிலிருந்து, பிப்ரவரி 21ம் தேதி உலக தாய்மொழிகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

(இணையத்தில் இருந்து)

## சிவராத்திரி

சிவராத்திரி எதனால் என்று புராணக்கதைகளில் கேட்டிருக்கிறோம். ஒரு வேடன் புலிக்குப் பயந்து மரத்துக்கு மேலே ஏறி அமர்ந்திருந்ததும், அது வில்வ மரம் என்பதும், தூக்கம் வராமல் இருக்க, அவன் ஒவ்வொரு இலையாகப் பறித்துக் கீழே போட்டுக் கொண்டிருக்க, அது கீழே இருக்கும் சிவலிங்கத்தில் விழுந்ததனால், அவனுக்கு சிவ தரிசனம் கிடைத்தது, அதுவே சிவராத்திரி.



**ஈழத்துப் புலமைகள் ( பாகம் 11)**

கவி ராஜர்

கடந்த இதழிலே மாமன்னன் இராவணன், தனது தாயார் சிவபெருமானைத் தரிசிக்க விருப்பங்கொண்டதால் _ மலையையே வெட்டி சிவபெருமானை மலையுடன் எடுத்துச் செல்ல முனைந்த திருக்கோணேஸ்வரம் திருத்தலத்திலே அர்ச்சகராகவும், சிறந்த தமிழறிஞராகவும், புலவராகவும் திகழ்ந்த பண்டித ராசர் பற்றிப்பார்த்திருந்தோம்.

இந்த இதழிலே அவர் காலத்தவரான கவிராஜர் எனும் புலமையைப் பார்ப்போம். இவரே பண்டித ராசர் எழுதிய கோணாசல புராணத்திற்குச் சிறப்புப் பாயிரம் எழுதியவராவர்.

கோணேசர் கல்வெட்டு என அறியப்படும் - கோணேச சாசனத்தை பாட்டுக்களாலும், உரை நடையாலும் இயற்றியவர்.

***"திருந்துகலி பிறந்தைஞ்ஞூற றொருபதுட***
***நிரண்டாண்டு சென்ற பின்னர்***
***புரிந்திடப மாதமதிலீரைந்தாந்***
***தேதி திங்கள்புணர்ந்த நாளீற்***
***றெறிந்த் புகழாலயமாஞ் சினகரமுங்***
***கோபுரமும் தேரூர் வீதி***
***பரிந்துரத்ன மணிமதிலும் பாவ நா***
***சகச்சுனையும் பகுத்தான் மேலோன்"***

இவர் இயற்றிய கோணேசர் கல்வெட்டையும், பண்டிதராசர் இயற்றிய "திரிகோணாசல புராணத்தையும், பரிசோதித்து, அச்சிட்டு உதவியவர் ஸ்ரீமான். பொ.வையித்திலிங்க தேசிகர் அவர்களாவார். அன்னார் பற்றியும் பிறிதொரு பாகத்தில் பார்ப்போம்.

**(தொடரும்)**

**ஆக்கம்**
ஆசிரியர் திரு மாணிக்கம் தவதுரை
Master Knowledge Educational Services